1973 நவம்பர் 24]

காட்டூர் கிராமத்தில் விவசாயக் கடன் சங்கத்தில் பணம் கையாடல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டூர் கிராமத்தில் விவசாயக் கடன் சங்கத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு பணம் எப்படி கையாடல் செய்யப்பட்டுள்ளது ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) &(உ) கேள்விகள் எழ இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநான் : தலைவரவர்களே, இந்த சங்கத்தின் தலைவர் ரூபாய் இரண்டு லட்சத்தை கையாடியதாகவும், பின்னர் ராஜினாமா செய்ததாகவும் செய்தி வந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அப்படி அல்ல. அந்த மாதிரிக் கையாடல் நடைபெறவில்லை என்று தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை வந்திருக்கிறது.

Fraud on Fertilizers in the Co-operative Credit Society at Nakkalakkottai

* 107. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any fraud on fertilizers has taken place in the Co-operative Credit Society at Nakkalakkottai, Sattur taluk, Ramanathapuram district; and

(*b*) if so, the action taken thereon by the Government?

[1973 நவம்பர் 24

நக்கலக்கோட்டை கூட்டுறவு நாணயச் சங்கத்தில் உர மோசடி

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுகாவில் உள்ள நக்கலக் கோட்டை கூட்டுறவு நாணயச் சங்கத்தில், உர மோசடி ஏதாவது நடந்திருக் கிறதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) கூட்டுறவு துணைப்பதிவாளர், சிவகாசி, கிராமவாசிகளை விசாரித்து, நக்கலக்கோட்டை கூட்டுறவு கிராமக் கடன் சங்கம் 1973-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் யூரியா உரத்தை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யாமல் தவருகப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரியவந்திருப்பதால், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங் களின் சட்டப்பிரிவு 65-ன் கீழ் விசாரணை செய்ய ஆணையிட்டுள்ளார்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, சென்ற ஆண்டு இதைப் போலவே தவறு நடந்திருக்கிறது. போலியாகத் தயாரிக்கப்பட்ட பில்கள் நூற்றுக்கு மேல் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆகையினுல் இந்த ஆண்டு இதே சொசைட்டிக்கு அதே தலைவர் மூலமாகத்தான் வினியோகிக்கப் பட்டிருக்கிறதா, அல்லது வேறு ஒருவர் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இப்பொழுது உர விற்பனையை தமிழ் நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி நடத்துகிற காரணத்தால், இவைகளெல்லாம் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. மத்திய வங்கியிலும் எந்த விதமான தவறும் ஏற்படாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த உர சம்பந்த மான தவறுகள் நடப்பதற்கு அங்கே சில அதிகாரிகள் காரணமாக இருந்தார் கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் மீது இலாகா சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கை என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விசாரணை முடிந்த பின்னர்தான் யார் குற்றவாளி என்று அறிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

Meter System for the Parking of Cars

* 108 *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras Corporation has sought the permission of the State Government to introduce meter system for the parking of cars in some thoroughfares; and

(*b*) if so, the details thereof?

காரகளை நிறுத்துவதற்காக மீட்டர் முறை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு சில பொது வழிகளில் கார்களை நிறுத்துவதற்காக மீட்டர் முறையைக் கொண்டுவர சென்னை மாநகராட்சி, மாநில அரசின் அனுமதியைக் கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகள் தக்கவாறு திருத்தப்பட்டு அரசால் ஏற்பளிக்கப்பட்ட பின்னரே முக்கிய சாலைகளில் கார்களை நிறுத்தி வைப்பதற்கு மீட்டர் முறையைக் கொண்டுவர அனுமதியளிக்க இயலும். இக்கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எந்தவிதமான முக்கியப் பகுதிகளில் மீட்டர்கள் பொருத்தலாமென்று மாநகராட்சி அரசுக்கு யோசனை அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெரிசல் மிகுந்தும் முக்கிய சாலைகளாகவும் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே எல்லாம் மீட்டர் பொருத்தலாம் என்று மாநகராட்சி கருத்து தெரிவித்திருக்கிறது.